# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (13.01.2016 முதல் 17.01.2016)

**அறிக்கை எண் 004/2016** **தேதி: 12.01.2016**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 31°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 17°செ முதல் 23°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 6°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் வறண்ட வானிலையே காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (13.01..2016 முதல் 17.01.2016)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 82 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 52 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13-01-16 | 0 | 30 | 19 | 4 | 82 | 52 | 10 | கிழக்கு |
| 14-01-16 | 0 | 30 | 19 | 4 | 82 | 52 | 10 | கிழக்கு |
| 15-01-16 | 0 | 30 | 19 | 4 | 82 | 52 | 10 | கிழக்கு |
| 16-01-16 | 0 | 30 | 19 | 4 | 82 | 52 | 10 | கிழக்கு |
| 17-01-16 | 0 | 30 | 19 | 4 | 82 | 52 | 10 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் மானாவாரியில் பயிரிடப்பட்டுள்ள சோளம், நிலக்கடலை மற்றும் பயிர் வகை பயிர்களை அறுவடை செய்யவும். அறுவடை முடிந்த பிறகு நிலத்தினை கொத்து அல்லது சட்டிக் கலப்பை கொண்டு உடனடியாக உழுவதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் கோடை கால மழையின் ஈரப்பத்ததை சேகரிக்கலாம்.
- ✓ நிலவும் குளிர் வெப்பநிலையில் பூக்கும் தருணத்தில் உள்ள நெற்பயிரில் மணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க 2 சதவீதம் டிஏபி (DAP) கரைசலை தெளிக்கவும்.
- ✓ தற்போது நிலவும் காலநிலையை கருத்தில் கொண்டு முன் பருவ கரும்பு சாகுபடியை பொங்கலுக்கு முன்பாகவே மேற்கொள்ளுவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம்.
- ✓ கடந்த 20 நாட்களாக வறண்ட வானிலை நிலவுவதால் பயிர்களில் பச்சையத்தை நிலைநிறுத்த மெத்தைலோ பாக்டீரியா (PPFM) 200 மில்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும்.
- ✓ அதிக ஈரப்பதம் மற்றும் குறைந்த வெப்பநிலை நிலவுவதால் மாவில் கரும்பூஞ்சாண நோய் வர வாய்ப்புள்ளது. இதை தவிர்க்க 1 லிட்டர் தண்ணீரில் பாஸ்போமிடான் (phosphamidon) 2 மில்லி மற்றும் 5 சதவீதம் மைதாவுடன் கலந்து தெளிக்கவும்.
- ✓ நிலவும் குறைந்த வெப்பநிலையால் கால்நடைகள் குறைந்த அளவு தண்ணீர் உட்கொள்ளும். இதை அவ்வப்பொழுது கவனித்து போதுமான அளவு சுத்தமான தண்ணீர் கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ கடந்த 20 நாட்களாக வறண்ட வானிலை நிலவுவதால் பயிர்களில் பச்சையத்தை நிலைநிறுத்த மெத்தைலோ பாக்டீரியா (PPFM) 200 மில்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.